(ஈ) பட்டப்படிப்பு கல்வியின் இணைப்பு மற்றும் தர முன்னேற்ற செயற்திட்டத்தின் (ஐஆர்கியுயூஈ) பூர்த்தியாக்கலின் பின்னர் கணனிகள், தளபாடங்கள், புத்தகங்கள் மற்றும் உபகரணங்கள் போன்ற அத்தகைய இச் செயற்திட்டத்தின் சொத்துக்கள் பல்கலைக்கழகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அந்த சொத்துக்கள் பெறுமதியிடப்பட்டு கணக்குகளிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 பெறவேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பல்கலைக்கழகமானது ஓய்வுபெற்றிருந்த, பதவி வறிதாக்கப்பட்ட மற்றும் வேறு இடங்களிற்கு இடமாற்றத்தில் சென்றிருந்த 253 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 10,175,390 கூட்டுமொத்தத் தொகையான நிலுவையாகவிருந்த மீதிகளை அறிவிடுவதற்கு 5 ஆண்டுகளிற்கு மேலாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வெளிநாட்டு வழங்குநர்களிற்கு வழங்கப்பட்ட ரூபா 5,000,378 கூட்டு மொத்தத் தொகையான முற்பணங்கள் புலனாய்வு செய்து உரிய வழங்குநர்களிடமிருந்து 10 ஆண்டுகளிற்கு மேலாக அந்த முற்பணங்களை அறிவிடாமல் 135 இறக்குமதி முற்பணக் கணக்குகளில்இருந்தன.

(இ) எரிபொருள், கொள்வனவுகள் மற்றும் கருத்தரங்குகள் போன் அத்தகைய பல்வேறு நோக்கங்களிற்காக செலுத்தப்பட்ட ரூபா 14.61 மில்லியன் கூட்டு மொத்தத் தொகையான முற்பணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை

எடுக்கப்பட்டிருக்காததுடன் 01 முதல 17 ஆண்டுகள் வரையான வீச்செல்லை கொண்ட காலமாக இருந்தன.

(ஈ) பல்வேறு வழங்குநர்களிற்கு ரூபா 59.2 மில்லியன் கூட்டுமொத்தத் தொகையான முற்பணங்கள் செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்த முற்பணங்கள் உரிய வழங்குநர்களை இனங்காண்பதற்கும் அவர்களிடமிருந்து அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்காமல் 5 ஆண்டுகளிற்கு மேலாக தீர்க்கப்படாமல் இருந்தது.

**2.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

ஒவ்வொரு விடயங்களிற்கும் எதிரே குறிப்பிடப்பட்ட பின்வரும் சான்றுகள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.

| விடயம் | | பெறுமதி<br>ரூபா | கிடைக்கப்பெறாத சான்றுகள் |
|---|---|---|---|
| (அ) | காணி மற்றும் கட்டிடங்கள் | 19,834,078 | உரித்துறுதிகள் |
| (ஆ) | பொறி மற்றும் இயந்திரங்கள் | 4,337,313 | நிலையான சொத்துப் பதிவேடுகள் |
| (இ) | மோட்டார் வாகனங்கள் | 972,960 | நிலையான சொத்துப் பதிவேடுகள் |
| (ஈ) | விளையாட்டுப் பொருட்கள் | 6,021,870 | நிலையான சொத்துப் பதிவேடுகள் |
| (உ) | தளபாடம் பொருத்திகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 132,868,565 | நிலையான சொத்துப் பதிவேடுகள் |
| (ஊ) | ஆய்வுகூட மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் | 20,791,555 | நிலையான சொத்துப் பதிவேடுகள் |
| (எ) | புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் | 17,889,686 | நிலையான சொத்துப் பதிவேடுகள் |
| (ஏ) | ஏனைய சொத்துக்கள் | 24,638,430 | நிலையான சொத்துப் பதிவேடுகள் |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | சில்லறை கடன்பட்டோர் | 14,357,980 | விரிவான பட்டோலைகள் மற்றும் காலப்பகுப்பாய்வு |

### 2.2.5 போதிய அதிகாரத்தால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொது முயற்சிகளின் பணிப்பாளர் நாயகத்தின் 1998 மார்ச் 06 ஆந் திகதிய பிஈ/01/174/11 (ஆ) ஆம் இலக்க கடிடம் மற்றும் பல்கலைக்கழக ஆணைக்குழுவின் 2013 மே 23 ஆந்திகதிய 08/2013 ஆம் இலக்க தாபனங்கள் சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்களிற்காக மொழித் தேர்ச்சிக்காக செலுத்த வேண்டிய படிகள் அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்டச் சபைகளிற்கு விரிவாக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், மொழித்தேர்ச்சிப் படியாக மீளாய்வாண்டின் போது 2005 இலிருந்து 2011 மார்ச் வரை பத்து கல்விசார் உத்தியோகத்தர்களிற்கு ரூபா 321,110 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் எழுபத்து நான்கு கல்விசாரா உததியோகத்தர்களிற்கு இன்னொரு ரூபா 187,252 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) பல்கலைக்கழகத்தின் சபை மற்றும் செனற்றின் அனுமதியில்லாமல் சுகாதார பராமரிப்பு விஞ்ஞான பீடத்தில் தாதியியல் நிகழிச்சித்திட்டத்தில் பீஎஸ்சீ வசதியளிப்பதற்கு நோர்வே ரீஆர்ஓஎம்எஸ்ஓ பல்கலைக்கழகத்திடமிருந்து ரூபா 17,327,951 தொகையான நிதிகள் பெறப்பட்டிருந்தது. இது தொடர்பில் தனித்தனியாக கணக்குப் புத்தகங்கள் பேணப்பட்டிருக்கவில்லை. நோர்வே பல்கலைக்கழகத்திடமிரந்து ரூபா 17,327,951 தொகை பெறப்பட்டிருந்த போதிலும் இதில் முன்னாள் பிரதி காசாளரின் கூற்றின் படி 2014 ஏப்ரல் 30 வரை ரூபா 8,614,737 தொகை செலவழிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களிற்கான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 109 ஆம் பிரிவு | 2012 ஆம் ஆண்டிற்காக நிதிக் கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வாரள் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 ஏப்ரல் 30 வரை அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களிற்கான தாபன விதிக்கோவை | |
| (i) அத்தியாயம் X இன் பிரிவு 20.6 | 02 கல்விசார் உத்தியோகத்தர்களால் எடுக்கப்பட்ட சம்பளமற்ற விடுமுறைகளின் விபரங்கள் மாதாந்தம் படிவம் பொது 96 இல் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கையிடப் பட்டிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் XXVII இன் பிரிவு 3:1 | பல்கலைக்கழகத்தின் கல்விசார் உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளிச் செல்லல் என்பன வருகைப் பதிவேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் உப வேந்தர் வழமையாக கல்விசார் உத்தியோகத்தர்கள் அவர்களுடைய வருகையை பதிவதில்லை என எனக்குத் தெரிவித்தார். |
| (இ) 2011 மே 6 ஆந் திகதிய பிஈ/எவ்எஸ்/ஏ/வாகனங்கள்/2011 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | 2013 யூலை மாதத்தில் பல்கலைக்கழகத்தின் வாகனங்கள் விற்பனையிலிருந்து பெறப்பட்ட ரூபா 577,000 தொகை திரட்டு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டில் பல்கலைக்கழகத்தின் தொழிற்பாடுகள் விளைவித்திருந்த மீண்டுவரும் செலவுகளிற்கான ரூபா 621,470,000 ஆன அரசாங்க மானியத்தைக் கணக்கிற்கு எடுக்க முன்னர் உள்ள ரூபா 765,406,686 ஆன பற்றாக்குறையை முன்னைய ஆண்டிற்கான ரூபா 516,211,000 அரசாங்க மானியத்தை கணக்கிற்கு எடுக்க முன்னரான ரூபா 600,358,590 ஆன நேரொத்த பற்றாக்குறையுடன் ஒப்பிடலாம் ஆகையால் நிதிசார் விளைவுகளில் ரூபா 165,048,096 ஆல் மேலும் ஒரு வீழ்ச்சியைக் காட்டுகின்றது. ரூபா 9,133,842 ஆன ஏனைய வருமானத்திற்கு எதிராக ரூபா 168,614,358 ஆல் தொழிற்பாட்டுச் செலவினம் அதிகரித்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1. செயலாற்றல்

மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்தின் கல்விசார் செயலாற்றல் பின்வருமாறு இருந்தன.

(அ) பரீட்சைகளின் பெறுபேறுகள்

2013 இல் நடைபெற்ற இறுதிப் பரீட்சைகள் மற்றும் சித்தியடைந்த பட்டதாரி மாணவர்களின் பின்வருமாறு உள்ளன.

| விபரங்கள் | விவசாய பீடம் | கலை மற்றும் கலாச்சார பீடம் | வர்த்தக மற்றும் முகாமைத்துவ பீடம் | விஞ்ஞான பீடம் | சுகாதார பராமரிப்பு விஞ்ஞான பீடம் |
|---|---|---|---|---|---|
| மீளாய்வாண்டின் போது இறுதிப் பரீட்சைகளிற்காக தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை | 24 | 311 | 103 | 41 | 42 |
| பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை | 246 | 311 | 81 | 34 | 42 |
| பரீட்சைக்காக தோற்றிய மாணவர் எண்ணிக்கையின சதவீதமாக பட்டப் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களின் எண்ணிக்கை | 100% | 100% | 78.64% | 82.92% | 100% |

**(ஆ) மாணவர் அனுமதி**

கடந்த 3 ஆண்டீகளின் போது ஒவ்வொரு பீடத்திற்கான அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் பட்டம் பெற்று வெளியேறிய மாணவர்களின் எண்ணிக்கை கீழே காட்டப்பட்டுள்ளன.

| பீடம் | அனுமதிபெற்ற மாணவர்களின் எண்ணிக்கை | | | பட்டம் பெற்று வெளியேறிய மாணவர்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|---|
| | 2010 | 2011 | 2012 | 2010 | 2011 | 2012 |
| விவசாய பீடம் | 127 | 175 | 174 | 16 | 29 | - |
| கலை மற்றும் கலாச்சார பீடம் | 1,466 | 1,621 | 1,441 | 40 | 312 | 431 |
| வர்த்தக மற்றும் முகாமைத்துவ பீடம் | 771 | 911 | 869 | 56 | 118 | 28 |
| விஞ்ஞான பீடம் | 214 | 367 | 368 | 12 | 31 | 17 |
| சுகாதார பராமரிப்பு விஞ்ஞான பீடம் | 215 | 238 | 238 | - | - | 27 |
| மொத்தம் | 2,793 | 3,312 | 3090 | 124 | 490 | 503 |

2012 ஆம் ஆண்டில் விவசாய பீடத்திலிருந்து எந்தவொரு மாணவரும் பட்டம் பெற்றிருக்காத அதேநேரம் கலை மற்றும் கலாசார பீடத்திலிருந்து 2010 இல் 40 மாணவர்கள் மாத்திரமே சித்தியடைந்திருந்தனர்.

**(இ) ஒரு மாணவருக்கான கிரயம்**

பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு பீடத்தின் மொத்தக் கிரயம் மற்றும் மீளாய்வாண்டிற்கான மாணவர் கிரயம் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | விவசாய பீடம் | கலை மற்றும் கலாச்சார பீடம் | வர்த்தக மற்றும் முகாமைத்து வ பீடம் | விஞ்ஞான பீடம் | சுகாதார பராமரிப்பு விஞ்ஞான பீடம் |
|---|---|---|---|---|---|
| | --------- | ------- | ----------- | ------------ | --------- |
| மொத்தக் கிரயம் (ரூபா) | 124,721,710 | 128,483,284 | 124,959,683 | 124,372,918 | 125,258,078 |
| மொத்த மாணவர் எண்ணிக்கை | 255 | 1290 | 775 | 579 | 359 |
| ஒரு மாணவருக்கான கிரயம் (ரூபா) | 489,105 | 99,599 | 161,238 | 214,806 | 348,908 |

விவசாய பீடத்தில் ரூபா 489,105 தொகையான ஒரு மாணவனுக்கான உயர்ந்த கிரயம் பதிவுசெய்திருந்த அதேநேரம் கலை மற்றும் கலாசார பீடத்தில் ரூபா 99,599 தொகையான ஒரு மாணவனுக்கான குறைவான கிரயத்தை பதிவுசெய்திருந்தது.

**(இ) மகாபொல மற்றும் உதவிப்பணம்**

மீளாய்வாண்டின் போது 925 மாணவர்களிற்கு மாஹாபொலவாக ரூபா 16,689,950 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் 1,069 மாணவர்களிற்கு உதவிப் பணங்களாக ரூபா 18,796,100 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த மாணவர்கள் அவர்களுடைய பாடநெறிகளை இடைநிறுத்தியதாக 2014 மே 22 ஆன கணக்காய்வு திகதிவரை 610 மாணவர்களுக்கு மாஹாபொல சம்பந்தமாக ரூபா 1,826,900 தொகை செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) நூலக முகாமைத்துவம்**

நூலகத்திலிருந்து நூல்களை எடுத்திருந்த 52 விரிவுரையாளர்கள் குறித்த காலத்திற்கிடையில் 393 புத்தகங்கள் மீள ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக 01 ஆண்டு முதல் 05 ஆண்டுகள் வரையான காலவீச்சில் நிலுவையாகவிருந்த அந்தப் புத்தகங்களை திரும்பப் பெறுவதற்கோ அல்லது தாமதத்திற்கான தண்டப்பணத்தினை விதிப்பதற்கோ முறையான நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

பல்கலைக்கழகமானது உபவேந்தர் பதவிக்காக பொருத்தமான நபர்களிடமிருந்து 2011 ஆகஸ்ட் 25 இல் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தது. 2006 மே 01 இல் அவருடைய பதவியை வறிதாக்கிய முன்னாள் தரம் II எண்கணித சிரேஷ்ட விரிவுரையாளர் 2012 பெப்ரவரி 13 இலிருந்து உபவேந்தராக நியமிக்கப்பட்டிருந்தார்.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உபவேந்தர் பதவிக்கான விண்ணப்பம் 2011 செப்தெம்பர் 30 வரை ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. கனடா பிரஜாவுரிமையுடைய ஒருவர் மற்றும் கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் தரம் II எண்கணித சிரேஷ்ட விரிவுரையாளர் என்போர் உபவேந்தர் பதவிக்காக விண்ணப்பித்திருந்தனர். அதேநேரம் அவர் 2011 செப்தெம்பர் 30 வரை பதவி வறிதாக்கப்பட்டிருந்தார்.

(ஆ) உபவேந்தர் பதவிக்கான விண்ணப்பம் 2011 செப்தெம்பர் 30 இல் முன்னாள் தரம் II எண்கணித சிரேஷ்ட விரிவுரையாளரால் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், உப வேந்தர் பதவிக்காக விண்ணப்பம் சமர்ப்பித்த பின்னர் 2011 ஒக்தோபர் 11 இலேயே அவருடைய பதவி மீளசேர்த்தலிற்காக பல்கலைக்கழகத்திற்கு கோரிக்கை செய்யப்பட்டிருந்தது.

(இ) சபையானது 2012 சனவரி 14 இல் அதன் 220 ஆவது கூட்டத்தில் கனடா பிரஜையை சிபார்சு செய்திருந்த அதேநேரம் இலஙகை அரசாங்க தாபன விதிக் கோவையின் V ஆம் அத்தியாயத்தின் 8.2 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளை கருத்திற்கொள்ளமால் உபவேந்தர் பதவிக்காக தெரிவு செய்தவர் 2006 மே 01 முதல் 2011 நவம்பர் 30 வரை அவருடைய பதவி வறிதாக்கப்பட்வர் கனடாவில் வசிக்கின்றார்.

(ஈ) முன்னாள் தரம் II எண்கணித சிரேஷ்ட விரிவுரையாளர் 2012 பெப்ரவரி 13 இல் உபவேந்தராக நியமிக்கப்பட்டிருந்தார். எவ்வாறாயினும், உபவேந்தராக 2012 மார்ச் 05 இலேயே பல்கலைக்கழகத்தில் அவர் அவருடைய கடமைகளை பெறுப்பேற்றிருந்ததுடன் கனடாவில் இருந்து திரும்பிய பின்னர் எண்கணித திணைக்களத்தில் முன்னாள் தரம் II எண்கணித சிரேஷ்ட விரிவுரையாளராக அவர் கடமையிலிருந்து அதேதிகதியில் விலகியிருந்தார்.

(உ) உபவேந்தராக நியமிக்கும் நேரத்தில் அவர் கனடாவில் வசிக்கின்ற போதிலும் தபாலிடப்பட்ட நியமனக் கடிதத்தில் மட்டக்களப்பு முகவரி குறிப்பிடப்பட்டது.

(ஊ) 2011 ஒக்தோபர் 11 இல் அதற்காக அவர் வேண்டுகை செய்த பின்னர் 2011 திசெம்பர் 01 இல் பல்கலைக்கழகத்தால் முன்னர் சிரேஷ்ட விரிவுரையாளர் திரும்ப வழங்கப்பட்டிருந்த போதிலும் அவர் 2012 மார்ச் 05 இலேயே முன்னாள் தரம் II எண்கணித சிரேஷ்ட விரிவுரையாளராக கடமையை ஏற்றிருந்தார்.

## 4.3 முகாமைத்துவ திறமையீனங்கள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) புலமைப் பரிசில்கள் பெற்று வெளிநாடுகளிற்கு சென்ற பல்கலைக்கழகத்தின் ஐம்பதியொன்பது விரிவுரையாளர்கள் புலமைப்பரிசில்களைப் பூர்த்தி செய்த பின்னர் கடமைக்கு திரும்பியிருக்கவில்லை அல்லது பல்கலைக்கழகத்தை விட்டு விலகிச் சென்றிருந்தனர். எவ்வாறாயினும், பல்கலைக்கழகம் உடன்படிக்கைகளை மீறியமைக்காக அந்த 59 விரிவுரையாளர்களிடமிருந்து ரூபா 150,994,569 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இது தொடர்பில் உபவேந்தர் 74 பிணைமுறி மீறியோர்களில் 12 வழக்குகள் சட்டநடவடிக்கை எடுப்பதற்கும் மீறியோரிடமிருந்து அறவிடவேண்டியதை அறவிடுவதற்கும் சட்டமா அதிபர் நாயக திணைக்கத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தனெ எனக்கு தெரிவித்திருந்தார். அந்த வழக்குகள் இரண்டு அரச சபைகள் கையாளுகின்றன. மேலும், 2014 ஏப்ரல் 30 வரை பிணைமுறி மீறியோரிடமிருந்து ரூபா 9.7 மில்லியன் கூட்டுமொத்த தொகை அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 29(டி) மற்றும் 29(ஈ) பிரிவுகளின் பிரகாரம் பல்கலைக்கழகத்தால் பட்டபின் படிப்பு பாடநெறிக்களுக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (யூஜீசி) அங்கீகாரம் 2013 திசெம்பர் 31 வரை கூட பெறப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அத்தகைய அங்கீகாரம் இல்லாமல் மூன்று பட்டபின்படிப்பு பாடநெறிகள் (கற்பிக்கப்பட்ட பாடநெறிகள்) நடாத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் உபவேந்தர் எம்பில், பிஎச்டி போன்ற அத்தகைய ஆராய்ச்சி அடிப்படை பாடநெறிகளிற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் அவசியமற்றதென்று என்கு தெரிவித்திருந்தார்.

(இ) இலங்கை அரசாங்க தாபனவிதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 5 ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 20 உத்தியோகபூர்வ விடுதிகளில் வசித்த 38 உத்தியோகத்தர்களிடமிருந்து வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. இருந்தபோதிலும், 2002 ஏப்ரல் 16 ஆந் திகதிய 147/2002 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 1 ஆம் பந்தியின் பிரகாரம் அரசாங்க மதிப்பீட்டாளரிடமிருந்து அறிக்கை பெற்றுக்கொள்ளாமல் மீளாய்வாண்டின் போது ரூபா 150 முதல் ரூபா 600 வரையான வீச்சில் மாதாந்த வாடகையில் பல்கலைக்கழகத்திற்கு சொந்தமான உத்தியோகபூர்வ விடுதிகளில் வசிக்கின்றவர்களிடமிருந்து பொருளாதார வாடகை அறவிடப்பட்டிருந்தது.

## 4.3. மருத்துவ உபகரணங்களின் கொள்வனவு

சுகாதார பராமரிப்பு விஞ்ஞான பீடத்தின் (எவ்எச்சிஎஸ்) பயன்பாட்டிற்காக இந்தியாவிலுள்ள ஒரு தனியார் கம்பனியிடமிருந்து முன்னைய ஆண்டின் போது ரூபா 13.36 மில்லியன் பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவொன்று (ரீஈசீ) மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு நியமிக்கப்பட்டிருக்கவில்லை. பதிலாக கொள்வனவுக் குழு (பிசீ) சிபார்சுசெய்யப்பட்டு மருத்துவ உபகரணங்கனை கொள்வனவு செய்வதற்கு அனுமதிக்கப்பட்டது.

(ஆ) சுகாதார பராமரிப்பு விஞ்ஞான பீடம் வேண்டப்பட்ட கேள்வி நடைமுறைகளைப் பின்பற்றாமல் தெரிவுசெய்யப்பட்ட வழங்குநர்களிற்கு ஈ மெயில் அனுப்புவதன் நேரடியாக கேள்விகளை வரவழைத்திருந்தது.

(இ) கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், எல்லா மூன்று கேள்விகளையும் ஒரே வழங்குநர் சமர்ப்பித்திருந்ததுடன் வழங்குநரால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளில் முறைகேடுகள் இருந்தன. எவ்வாறாயினும் இது கொள்வனவுக் குழுவால் கருத்திற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) "ரிசு செய்படுத்துதலின் எட்டு உதிரிப்பாகங்கள்" என்றழைக்கப்படும் மருத்துவ உபகரணங்கள் ரூபா 4.5 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. ரூபா 2.9 மில்லியன் பெறுமதியான ரிசு செயற்படுத்துதல்

பிரதான பாகம் கொள்வனவு செய்ய தவறியமை காரணமாக கொள்வனவு செய்த திகதியிலிருந்து பெட்டியில் பயனற்று இருந்தது.

(உ) கணக்காய்வு குழு பொய்யான கேள்விகள் சமர்ப்பித்தல், மிகவும் அதிகமான விலைகள், பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்ட விடயங்களில் தற்காலிக வியாபாரக்குறி மற்றும் அடையாளத்துடன் வழங்கல் மற்றும் வழங்கலிலுள்ள தாமதம் என்பன மூலம் பல்கலைக்கழகத்தை ஏமாற்றிய வழங்குநரிடமிருந்து இலங்கை கிழக்கு பல்கலைக்கழகத்தில் வழங்குநரை கறுப்புப் பட்டியலிற்கு 2014 சனவரி 27 இல் நடைபெற்ற அதன் கூட்டத்தில் சிபார்சு செய்யப்பட்டிருந்த போதிலும், பல்கலைக்கழகமானது 2014 யூன் 30 வரை கூட வழங்குநரை கறுப்பு பட்டியலிற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட விசாரணைக் குழுவால் சிபார்சு செய்யப்பட்டவாறு வழங்குநருக்கு செய்யப்பட்ட ரூபா 850,546 மேலதிக கொடுப்பனவை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.5 மனிதவள முகாமைத்துவம்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளபடியான பதவியணியின் நிலைமை கீழே தரப்பட்டுள்ளது.

| பதவியணி வகை | அங்கீகரித்த ஆளணி | உள்ளபடியான ஆளணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகை |
|---|---|---|---|---|
| கல்விசார் | 230 | 153 | 72 | - |
| கல்விசார் துணைநிலை | 14 | 09 | 05 | - |
| நிர்வாகம் | 29 | 19 | 10 | |
| தற்காலிக (கல்விசார்) | 59 | 58 | 01 | - |
| வருகையாளர் | - | - | - | 70 |
| மொத்தம் | 332 | 239 | 388 | 70 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகமானது 88 வெற்றிடங்களை நிரப்புவதற்கு கீளாய்வாண்டு இறுதிவரைகூட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல்கலைக்கழகத்தின் ஐந்து பீடங்களில் பேராசிரியர் மற்றும் இணைந்த பேராசிரியர் போன்ற அத்தகைய பிரதன கல்விசார் பதவியில் 20 வெற்றிடங்கள் உள்ளன. எவ்வாறாயினும், பல்கலைக்கழகமானது வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

இது தொடர்பில், உபவேந்தர் வெற்றிடப்பதவிகள் பல சந்தர்ப்பங்களில் பத்திரிகை விளம்பரங்கள் ஊடாக விளம்பரப்படுத்தப்பட்டிருந்தது, ஆனால் எந்தவொரு விளைவுகளும் இல்லை என எனக்கு தெரிவித்திருந்தார்.

**4.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

2007 ஆம் ஆண்டில் ரூபா 2,018,963 கிரயத்தில்இழுவை வண்டி கொள்வனவு செய்யப்பட்டு செனற் கட்டிடத்தில் பொருத்தப்பட்டவை உதிரிப்பாங்கள் இன்மை காரணமாக ஆறு ஆண்டுகளிற்கும் அதிகமாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5. கணக்களிதகைமை மற்றும் நல்லாளுகை**

**5.1 ஆண்டறிக்கை முன்வைத்தல்**

2011 ஆம் அண்டிற்கான ஆண்டறிக்கை 2014 சனவரி 20 இலேயே பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2012 ஆம் அண்டிற்கான ஆண்டறிக்கை 2014 ஏப்ரல் 30 வரை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.2 செயற்பாட்டுத் திட்டம்**

அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் 2010 மார்ச் 10 ஆந் திகதிய பிஎவ்/ஆர்/2/2/3/5/(4) ஆம் இலக்க சுற்றறிக்கை கடிதத்தின் பிரகாரம் பல்கலைக்கழகமானது மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டுத் திட்டம் மற்றும் வருடாந்த செயலாற்றல் என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.3 உள்ளகக் கணக்காய்வு**

நிரந்தர மற்றும் அனுபவமுள்ள பதவியணியினர் வினைத்திறனான மற்றும் ஆக்கபூர்வமான வழியில் உள்ளக கணக்காய்வை மேற்கொள்வதற்கு நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.4 கொள்வனவுத் திட்டம்

2006 கொள்வனவு வழிகாட்டல்களின் 4.2 ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட செலவினம் மற்றும் உண்மையான செலவினத்திற்கு இடையில் பாரிய முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் ஒரு தாக்கமான கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைக் காட்டுகின்றது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்கு காலம் பல்கலைக்கழக உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(இ) முற்பணங்களின் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்
(ஈ) கொள்வனவு நடைமுறைகள்
(உ) ஓய்வுபெறல் நடைமுறைகள்

ஒப்பம்: எச்.ஏ.எஸ். சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி
*M*

**21. இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 2013 திசெம்பர் 31ல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுகள் மீது 1978ஆம் ஆண்டு 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(2)ஆம் பிரிவு மற்றும் 1971ஆம் ஆண்டு 38ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவு என்பவற்றின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை தொடர்பில் கிழக்குப் பல்கலைக்கழக முகாமைத்துவத்தின் பதிலளிப்பு**

| | கணக்காய்வுப் பத்தியின் மேற்கோள்களும் ஆளும் அதிகாரசபையின் முகாமைத்துவ அவதானிப்புகளும் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| **2.2 நிதிக்கூற்றுகள் மீதான கருத்துரைகள்**<br>**2:2:1 இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்கள் (எஸ்.எல்.பி.எஸ்.ஏ.எஸ்)** | | |
| | மீளாயிவாண்டின் போது முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டதும் தற்போது பயன்படுத்தப்படுவதுமான ரூபா 6,229,384 மொத்த கிரயத்திலுள்ள ஆய்வு கூடம், கற்பித்தல் உபகரணங்கள் மற்றும் வாகனங்கள் போன்ற அத்தகைய நிலையான சொத்துக்கள் எஸ்.எல்.பி.எஸ்.ஏ.எஸ்-3 இன் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வாளர் தலைமையதிபதி அவர்களின் கூற்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. கிழக்குப் பல்கலைக்கழகமானது தனியார் சேவை வழங்குனர் மூலம் நிலையான சொத்துப் பதிவேட்டினை முடிக்க நடவடிக்கை எடுத்துள்ளது. இப்பணி 2014, ஆனி மாதம் இறுதிக்கு முன் நிறைவுற்றதும் இது இறுதிக் கணக்குடன் இணைக்கப்படும். |
| **2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்** | | |
| (அ) | 2011 ஆம் ஆண்டில் புத்தள, ஊழியர் மேம்பாட்டு நிலையத்திலிருந்து பல்கலைக்கழகத்தால் கையேற்கப்பட்டிருந்த தளபாடங்களின் பெறுமதி மதிப்பீட்டுக் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வாளர் தலைமையதிபதி அவர்களின் கூற்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. கிழக்குப் பல்கலைக்கழகமானது தனியார் சேவை வழங்குனர் மூலம் நிலையான சொத்துப் பதிவேட்டினை முடிக்க நடவடிக்கை எடுத்துள்ளது. இப்பணி 2014, ஆனி மாத இறுதிக்கு முன் நிறைவுற்றதும் இறுதிக் கணக்குடன் இணைக்கப்படும். |
| (ஆ) | பல்கலைக்கழகம் ‘‘விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப எம்/எஸ் கொன்சோரியம் நோர்வேயின் பல்கலைக்கழக தொடர்பு திட்டம்’’ மற்றும் ‘‘உபவேந்தர் நிதியம்’’ என்ற பெயரில் இரண்டு வங்கிக் கணக்குகளைப் பேணியிருந்ததுடன், மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறு இந்தக் கணங்குகளில் முறையே ரூபா 1,743,603 மற்றும் ரூபா 2,912,441 தொகைகள் இருந்தது. எவ்வாறாயினும், அந்த மீதிகள் கணக்குகளிற்கு கொண்டு வரப்பட்டு இருக்கவில்லை. | கணக்காய்வாளர் தலைமையதிபதி அவர்களின் கூற்று ஏற்றுக்கொள்ளப்பட்டது.<br><br>ஏற்கெனவே அது 2011ஆம் ஆண்டுப் பகுதியில் இனங்காணப்பட்டபோதும் முன்னாள் பதில் நிதியாளரும், பிரதி நிதியாளருமான திரு. எம். ஏ. பத்மகுமார் அவர்களுக்கெதிராக இனங்காணப்பட்ட விசாரணைகளை ஜனாதிபதி புலனாய்வுப் பிரிவானது ஆராய்ந்துகொண்டிருந்ததனால், கணக்குப் புத்தகங்களுக்கு மாற்றுவதற்கு எவ்விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. தற்போது கணக்காய்வுக் குழுவின் பரிந்துரைக்கமைவாக மேற்படி கணக்குகள் கி.ப.கழக கணக்குப் புத்தகங்களுக்கு மாற்றப்பட்டுள்ளது. மேலும் 26.05.2014 இல் நடைபெற்ற 33ஆவது கணக்காய்வுக்குழுக் கூட்டத்தில் NUFU நிதியை கி.ப.கழக கணக்கில் வைப்பிலிடும்படி பரிந்துரைக்கப்பட்டது. |
| (இ) | ரூபா 19,411,037 மொத்தப் பெறுமதியில் தளபாட உபகரணங்கள், புத்தகங்கள் மற்றும் வாகனங்கள் போன்ற அத்தகைய சொத்துக்கள் 1990இல் நிலவிய போர்ச் சூழலின் போது இழக்கப்பட்டன என அறிக்கையிடப்பட்டிருந்தது. இது தொடர்பில், சொத்து இழப்புக்களாக கணக்குப் புத்தகத்தில் ரூபா 17,860,814 மாத்திரமே சீராக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ரூபா 1,550,223 ஆன மீகுதிச் சொத்துக்கள் சீராக்கல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை. | சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து இதுவரை எதுவிதமான ஒப்புதல்களும் கிடைக்கப் பெறாமையால் இழக்கப்பட்ட மொத்தப் பெறுமதி ரூபா 19,411,037.00 புத்தகங்களில் இன்றுவரை சரிசெய்யப்படவில்லை. இருப்பினும், பேரவையின் பரிந்துரைக்கமைவாகவும், உயர் கல்வியமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்துடனும் இழக்கப்பட்ட சொத்தின் பெறுமதியை நீக்குவதற்கு பொது நிதி திணைக்களத்திலிருந்து அனுமதியை பெறுவதற்கு ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| (ஈ) | பட்டப்படிப்புக் கல்வியின் இணைப்பு மற்றும் தர முன்னேற்ற செயற்றிட்டத்தின் (ஐ.ஆர்.கியு.யூ.ஈ) பூர்த்தியாக்கலின் பின்னர் கணனிகள், தளபாடங்கள், புத்தகங்கள் மற்றும் உபகரணங்கள் போன்ற அத்தகைய இச் செயற்றிட்டத்தின் சொத்துக்கள் பல்கலைக்கழகத்திற்கு கையளிக்கப்பட்டு இருந்தது. எவ்வாறாயினும் அந்த சொத்துக்கள் பெறுமதியிடப்பட்டு கணக்குகளிற்கு கொண்டுவரப் பட்டிருக்கவில்லை. | கணக்காய்வாளர் தலைமையதிபதி அவர்களின் கூற்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. உயர்கல்வி அமைச்சின் செயலாளரின் 15.09.2010 அன்று திகதியிடப்பட்ட கடிதத்தின் பிரகாரம் IRQUE (ஐஆர்கியூஈ) செயற்றிட்டத்தின்கீழ் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் யாவும் கி.ப.கழக IRQUE திட்ட LTS அலுவலகத்தினால் பொருத்தமான திணைக்களங்களுக்கு தற்போது மாற்றப்பட்டுள்ளன.<br><br>மேலும் நிதியறிக்கையில் சொத்துக்களின் முதலாக்கம் தொடர்பாக, கிழக்குப் பல்கலைக்கழகமானது தனியார் சேவை வழங்குனர் மூலம் கி.ப.கழக நிலையான சொத்துப் பதிவேட்டினை தயார்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது. அத்துடன் 2014ஆம் ஆண்டு ஜுலை மாதத்துக்குள் இப்பணி நிறைவுற்றதும் இவை 31.12.2014 க்குரிய நிலையான சொத்துக்கள் கூற்றுடன் இணைத்துக் கொள்ளப்படும். |

**2.2.3 பெறவேண்டிய கணக்குகள்**

| | | |
|---|---|---|
| (a) | பல்கலைக்கழகமானது ஓய்வுபெற்றிருந்த, பதவி வறிதாக்கப்பட்ட மற்றும் வேறு இடங்களிற்கு இடமாற்றம் சென்றிருந்த 253 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 10,175,390 கூட்டுமொத்தத் தொகையான நிலுவையாகவிருந்த மீதிகளை அறவிடுவதற்கு 05 ஆண்டுகளிற்கு மேலாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தமது முற்பண கடனைச் செலுத்துமாறு சம்பந்தப்பட்ட ஊழியர்களுக்கு தனிப்பட்ட முறையில் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. அதற்கு அவர்கள் உடன்படாவிடின், அவர்களுடைய பிணையாளிகளிடமிருந்து அல்லது சம்பந்தப்பட்ட ஊழியர்களின் பல்கலைக்கழக சேமலாப நிதியிலிருந்து கடனை அறவிட நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>வேறு அலுவலகங்களுக்கு மாற்றலாகிச் சென்ற அலுவலர்கள் தொடர்பாக அவர்கள் சார்ந்த பல்கலைக்கழகம்/ நிறுவகத்திலிருந்து நிலுவைத் தொகையினை அறவிடுவதற்கு ஏற்கெனவே அறிவுறுத்தப்பட்டுள்ளது. |
| (b) | வெளிநாட்டு வழங்குனர்களிற்கு வழங்கப்பட்ட ரூபா 5,00,378 கூட்டு மொத்தத் தொகையான முற்பணங்கள் புலனாய்வு செய்து உரிய வழங்குநர்களிடமிருந்து 10 ஆண்டுகளிற்கு மேலாக அந்த முற்பணங்களை அறவிடாமல் 135 இறக்குமதி முற்பணக் கணக்குகளில் இருந்தன. | கணக்காய்வாளர் தலைமையதிபதி அவர்களின் கூற்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. இவ்விடயம் தொடர்பாக நிதிக்குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டதுடன், இதனை விசாரணை செய்வதற்காக குழுவொன்றும் நியமிக்கப்பட்டது. போதிய ஆதாரங்கள் இல்லாததாலும், அனேகமான முற்பணங்கள் 1995ஆம் ஆண்டுக்கு முன்னர் வழங்கப்பட்டதாலும், குறிக்கப்பட்ட காலத்துக்குள் விசாரணையை முடிக்க முடியவில்லை. எனினும், இதனை நிவர்த்திக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (c) | எரிபொருள், கொள்வனவுகள் மற்றும் கருத்தரங்குகள் போன்ற அத்தகைய பல்வேறு நோக்கங்களிற்காக செலுத்தப்பட்ட ரூபா 14.61 மில்லியன் கூட்டு மொத்தத் தொகையான முற்பணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் 01முதல் 17 ஆண்டுகள் வரையான வீச்செல்லை கொண்ட காலமாக இருந்தன. | கணக்காய்வாளர் தலைமையதிபதி அவர்களின் கூற்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. இது தொடர்பாக கணக்காய்வுக்குழு மற்றும் நிதிக்குழுக் கூட்டங்களில் அடிக்கடி ஆராயப்பட்டும், அவதானிக்கப்பட்டும் வந்ததுடன் 2009, 2010, 2011 மற்றும் 2012ஆம் ஆண்டுகளுக்கான தீர்க்கப்படாத முற்பணங்களை பின்வரும் பரிந்துரைகளுக்கு அமைவாகத் தீர்ப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

<table>
<tr><td></td><td></td><td>அ. தீர்க்கப்படாதவர்களின் முற்பணங்களை 2013ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் அறவிடுவதற்கு தனிப்பட கடிதங்கள் அனுப்புதல்.<br><br>ஆ. ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணங்களுடன்கூடிய தீர்ப்பனவுகளை ஏற்றுக்கொள்ளல்.<br><br>முற்பணத்தை செலுத்த தவறியோரின் சம்பளத்திலிருந்து அறவிடுவதற்கு ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td>(d)</td><td>பல்வேறு வழங்குநர்களிற்கு ரூபா 59.2 மில்லியன் கூட்டுமொத்தத் தொகையான முற்பணங்கள் செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்த முற்பணங்கள் உரிய வழங்குநர்களை இனங்காண்பதற்கும் அவர்களிடமிருந்து அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்காமல் 5 ஆண்டுகளிற்கு மேலாக தீர்க்கப்படாமல் இருந்தது.</td><td>கணக்காய்வாளர் தலைமையதிபதி அவர்களின் கூற்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. இது தொடர்பாக கணக்காய்வுக்குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டதுடன், இதனை விசாரணை செய்வதற்காக குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. போதியளவு ஆதாரங்கள் இல்லாததாலும், அனேகமான முற்பணங்கள் 1995ஆம் ஆண்டுக்கு முன்னர் வழங்கப்பட்டதாலும், நிர்ணயிக்கப்பட்ட காலத்துக்குள் விசாரணையை முடிக்க முடியவில்லை. ஆயினும், இதனை நிவர்த்திக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td colspan="3">2.2.4 கணக்காய்வுக்கான சான்றுகளின்மை</td></tr>
<tr><td></td><td>ஒவ்வொரு விடயங்களிற்கும் எதிரே குறிப்பிடப்பட்ட பின்வரும் சான்றுகள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை.<br><br>
<table>
<tr><th>விடயம்</th><th>பெறுமதி</th><th>கிடைக்கப் பெறாத சாண்றுகள்</th></tr>
<tr><td>(i) காணி மற்றும் கட்டிடங்கள்</td><td>19,834,078</td><td>உரித்துறுதிகள்</td></tr>
<tr><td>(ii) பொறி மற்றும் இயந்திரங்கள்</td><td>4,337,313</td><td rowspan="7">நிலையான சொத்துப் பதிவேடுகள்</td></tr>
<tr><td>(iii) மோட்டார் வாகனங்கள்</td><td>972,960</td></tr>
<tr><td>(iv) விளையாட்டு உபகரணங்கள்</td><td>6,021,870</td></tr>
<tr><td>(v) தளபாடம் பொருத்துக்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள்</td><td>132,868,565</td></tr>
<tr><td>(vi) ஆய்வுகூட மற்றும் கற்பித்தல் உபகரணங்கள்</td><td>20,791,555</td></tr>
<tr><td>(vii) புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள்</td><td>17,889,686</td></tr>
<tr><td>(viii) ஏனைய சொத்துக்கள்</td><td>24,638,430</td></tr>
<tr><td>(ix)சில்லறை கடன்பட்டோர்</td><td>14,357,980</td><td>விரிவான பட்டோலைகள் மற்றும் காலப் பகுப்பாய்வு</td></tr>
</table></td><td>1. கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கு சொந்தமான எல்லாக் காணிகளும் நீண்டகால குத்தகைக்கு எடுக்கப்பட்ட அரசாங்க காணிகளாகும். கடந்த மூன்று தசாப்தகாலமாக கிழக்கு மாகாண சபையில் காணி நிர்வாகம் ஒழுங்காகக் காணப்படாமையினால் கிழக்குப் பல்கலைக்கழகமானது தற்காலிக கையளிப்புக் கட்டளையை பிரதேச செயலகத்திலிருதே பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது. தற்போது சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து உறுதியின் உரிமத்தைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>2. நிலையான சொத்துப் பதிவேட்டினை தயார்படுத்தும் நடவடிக்கையை இலங்கையில் நற்பெயருள்ள தனியார் சேவை வழங்குனருக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் அவ்வேலை முடிவடையும் தறுவாயில் உள்ளது. நிலையான சொத்துக்கள் பற்றிய விபரங்களை எளிதில் சரிபார்க்க முடிவதுடன் 31.12.2014 திகதியில் நிலையான சொத்தாக்கக் கூற்றில் இது வெளிப்படுத்தப்படும்.<br><br>3. 2012ஆம் ஆண்டுக்கான வருடாந்த சொத்துக் கணக்கெடுப்பானது ஏற்கெனவே முடிவடைந்துள்ளதுடன் 2013ஆம் ஆண்டுக்கான சொத்துக் கணக்கெடுப்பும் தற்போது முடிவடைந்துள்ளது. அவற்றின் அறிக்கைகள் கணக்காய்வுக்கு தற்போது கிடைக்கக் கூடியதாகவுள்ளது.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | | 4. 1990ஆம் ஆண்டுக்கு முற்பட்ட பல்வேறுபட்ட கடனாளிகளின் ஆண்டுப் பகுப்பாய்வு அட்டவணையானது ஆவணங்களின் சான்றுகள் கிடைக்காமையால் பெற்றுக்கொள்ள முடியாமல் உள்ளது. |
| **2.2.5 போதிய திகாரத்தால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்** | | |
| அ. | பொது முயற்சிகளின் பணிப்பாளர் நாயகத்தின் 1998 மார்ச் 06 ஆந் தியகிய பிஈ/01/174/11 (ஆ) ஆம் இலக்கக் கடிதம் மற்றும் பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் 2013 மே 23 ஆந் திகதிய 08.∴.2013 ஆம் இலக்க தாபனங்கள் சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்களிற்காக மொழித் தேற்சிக்காக செலுத்த வேண்டிய படிகள் அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்டச் சபைகளிற்கு விரிவாக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், மொழித்தேர்ச்சிப் படியாக மீளாய்வாண்டின் போது 2005 இலிருந்து 2011 மார்ச் வரை பத்து கல்விசார் உத்தியோகத்தர்களுக்கு ரூபா 187,252 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | நாம் இக் கூற்றுக்கு உடன்படுகின்றோம். 2011ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை மொத்தமாக ரூபா 321,110.00 ஆனது மொழித் தேர்ச்சி உதவுத்தொகையாக கல்விசார் ஊழியர்களுக்கு செலுத்தப்பட்டுள்ளது.<br><br>சம்பந்தப்பட்ட ஊழியர்களிடமிருந்து பணத்தை மீள அறவிட நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். |
| ஆ. | பல்கலைக்கழகத்தின் சபை மற்றும் செனற்றின் அனுமதியில்லாமல் சுகாதார பராமரிப்பு விஞ்ஞானபீடத்தில் தாதியியல் நிகழ்ச்சித்திட்டத்தில் பீ.எஸ்.சீ வசதியளிப்பதற்கு நோர்வே ரீ.ஆர்.ஓ.எம்.எஸ்.ஓ பல்கலைக்கழகத்திடமிருந்து ரூபா 17,327,951 தொகை பெறப்பட்டிருந்தபோதிலும் இதில் முன்னாள் பிரதி நிதியாளரின் கூற்றின்படி 2014 ஏப்ரல் 30 வரை ரூபா 8,614,737 தொகை செலவழிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வாளர் தலைமையதிபதி அவர்களின் கூற்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. இது தொடர்பாக 27.10.2013 இல் நடைபெற்ற 26ஆவது கணக்காய்வுக் கூட்டத்தில் பின்வருவன அவதானிக்கப்பட்டுள்ளன, இத்திட்டத்தைக் கையாண்டவர்கள் தற்போது உயிருடனோ/ கிடைக்கக் கூடியதாகவோ இல்லாதிருப்பதால் நோர்வே நாட்டின் ரொம்சோ பல்கலைக்கழகத்திலிருந்து மொத்தமாகப் பெறப்பட்ட பணம் எவ்வளவு என்பது தொடர்பாக நிரூபிப்பதற்கு போதிய ஆதாரங்கள் இல்லாதிருக்கிறது. இதனால் நிதி உட்பட செயல் திட்ட விபரங்களைப் பெற்றுக் கொள்வதற்காக ரொம்சோ பல்கலைக்கழகத்தின் உரிய அதிகாரிகளுக்கு கடிதம் அனுப்ப முடிவெடுக்கப்பட்டது. கடிதத்துடன் இது தொடர்பாக நினைவூட்டல்கள் அனுப்பப்பட்டும் எவ்விதமான பதிலும் இதுவரை கிடைக்கவில்லை.<br><br>பல்கலைக்கழகம் வெளிநாட்டு முகவர்களிடமிருந்து நிதி பெறுவது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்வது தொடர்பாக ஒரு வழிகாட்டியை தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளது.<br><br>மேலும் மிகுதித் தொகை ரூபா 8,614,737.00 ஆனது கணக்காய்வுக் குழுவின் பரிந்துரைக்கமைவாக கணக்குப் புத்தகத்தில் பதியப்பட்டுள்ளது.<br><br>எவ்வாறாயினும் பல்கலைக்கழகமானது தொடர்ந்தும் செயல் திட்டம் தொடர்பாக சான்றாகக் காட்டுவதற்கு எவ்வகையான தகவல் இருக்கும் என்பதை காண தொடர்ந்து முயற்சிக்கின்றது. |

| | | |
|---|---|---|
| **2:2:6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை** | | |
| (அ) | **109 ஆம் பிரிவு**<br><br>கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட 2012ஆம் ஆண்டு வருடாந்த கணக்கறிக்கை அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்படவில்லை. | கணக்காய்வாளர் தலைமையதிபதி அவர்களின் கூற்று ஏற்றுக்கொள்ளப்பட்டது.<br><br>இவ்விடயமானது 27.01.2014 அன்று நடைபெற்ற கணக்காய்வுக் குழுவின் 29ஆவது கூட்டத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டதுடன் 2010, 2011 மற்றும் 2012ஆம் ஆண்டுகளின் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட வருடாந்த கணக்கறிக்கைகளை இயன்றளவு விரைவாக வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. |
| (ஆ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களிற்கான தாபன கோவை<br><br>(i). அத்தியாயம் X இன் பிரிவு 20.6<br><br>02 கல்விசார் உத்தியோகத்ததுகளால் எடுக்கப்பட்ட சம்பளமற்ற விடுமுறைகளின் விபரங்கள் மாதாந்தம் பொது படிவம் 96 இல் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை | இதற்கு நாம் உடன்படுகின்றோம், எதிர்வரும் காலங்களில் தரப்பட்ட படிவத்திற்கு அமைவாக சம்பளமற்ற விடுமுறை தொடர்பான சகல விபரங்களையும் கணக்காய்வாளர் தலைமையதிபதி அவர்களுக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| | (ii). அத்தியாயம் XXVII இன் பிரிவு 3:1<br><br>பல்கலைக்கழகத்தின் கல்விசார் உத்தியோகத்ததுகளின் வருகை மற்றும் வெளிச் செல்லல் என்பன வருகை பதிவேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் உப வேந்தர் வழமையாக கல்விசார் உத்தியோகத்தர்கள் அவர்களுடைய வருகையை பதிவதில்லை என எனக்குத் தெரிவித்தார். | கல்விசார் ஊழியர்கள் தமது வரவினைப் பதிவு செய்யும் வழக்கம் பொதுவாக இலங்கையிலுள்ள எந்தப் பல்கலைக்கழகங்களிலும் காணப்படவில்லை. எனினும் பீடவாரியாக விடுமுறை தொடர்பான விபரங்கள் பேணப்படுகின்றன. |
| (இ) | 2011 மே 6 ஆந் திகதிய பிஈ/எவ்எஸ்/ஏ/ வாகனங்கள்/2011 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை<br><br>2013 யூலை மாதத்தில் பல்கலைக்கழகத்தின் வாகனங்கள் விற்பனையிலிருந்து பெறப்பட்ட ரூபா 577,000 தொகை திரட்டு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | நாம் இக் கூற்றுக்கு உடன்படுகின்றோம், 2011ஆம் ஆண்டு மே மாதம் 6ஆம் திகதிய பொது நிதி சுற்றறிக்கை இல. பிஈ/எவ்எஸ்/ஏ/ வாகனங்கள்/2011 இற்கமைவாக ஒத்துப்போக நடவடிக்கை எடுக்கப்படும். |
| **3. நிதிசார் மீளாய்வு** | | |
| 3.1 நிதிசார் விளைவுகள் | | |
| | சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டில் பல்கலைக்கழகத்தின் தொழிற்பாடுகள் விளைவித்திருந்த மீண்டுவரும் செலவுகளிற்கான ரூபா 621,470,000 ஆன அரசாங்க மானியத்தைக் கணக்கிற்கு எடுக்கமுன்னர் உள்ள ரூபா 765,406,686 ஆன பற்றாக்குறையை முன்னைய ஆண்டிற்கான 7பா 516,211,000 அரசாங்க மானியத்தை கணக்கிற்கு எடுக்க முன்னரான ரூபா 600,358,590 ஆன | செயற்பாட்டிற்காக குறித்துக்கொள்கிறோம். |

| | | |
|---|---|---|
| | நேரொத்த பற்றாக்குறையுடன் ஒப்பிடலாம் ஆகையால் நிதிசார் விளைவுகளில் ரூபா 165,048,096 ஆல் மேலுமொரு வீழ்ச்சியைக் காட்டுகின்றது. ரூபா 9,133,842 ஆன ஏனைய வருமானததிற்கு எதிராக ரூபா 168,614,358 ஆல் தொழிற்பாட்டுச் செலவீனம் அதிகரித்தமை இந்த வீச்சிக்கு பிரதான காரணமான இருந்தது. | |
| **4. செயற்பாட்டு மீளாய்வு** | | |
| **4.1 செயலாற்றல்** | | |
| (அ) | பரீட்சைகளின் பெறுபேறுகள் | செயற்பாட்டிற்காக குறித்துக்கொள்கிறோம். |
| (ஆ) | மாணவர் அனுமதி | |
| (இ) | ஒரு மாணவருக்கான கிரயம் | |
| (ஈ) | மாகபொல மற்றும் உதவிப்பணம் | |
| (உ) | **நுலக முகாமைத்துவம்**<br><br>நூலகத்திலிருந்து நூல்களை எடுத்திருந்த 52 விரிவுரையாளர்கள் குறித்த காலத்திற்கிடையில் 393 புத்தகங்கள் மீள் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக 01 ஆண்டு முதல் 05 ஆண்டுகள் வரையான காலவீச்சில் நிலுவையாகவிருந்த அந்தப் புத்தகங்களை திரும்பப் பெறுவதற்கோ அல்லது தாமதத்திற்கான தண்டப்பணத்தினை விதிப்பதற்கோ முறையான நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனேகமான புத்தகங்கள் மீள ஒப்படைக்கப்பட்டுள்ளன. மேலும் புத்தகங்களை இரவல் பெற்றவர்களிடமிருந்து புத்தகத்தின் பெறுமதியைப் பெறுவதற்காக நினைவூட்டற் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. அதற்கு அவர்கள் பதிலளிக்காவிட்டால், புத்தகத்தின் பெறுமதியுடன் தண்டப்பணத்தையும் அவர்கள் சேவையிலிருக்கும் பட்சத்தில் சம்பளத்திலிருந்து அவ்வாறில்லாவிட்டால் பல்கலைக்கழக சேமலாப நிதியிலிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| **4.2 உபவேந்தர் நியமனம்** | | |
| | பல்கலைக்கழகமானது உபவேந்தர் பதவிக்காக பொருத்தமான நபர்களிடமிருந்து 2011 ஆகஸ்ட் 25 இல் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தது. 2006 மே 01 இல் அவருடைய பதவியை வறிதாக்கிய முன்னாள் தரம் II எண்கணித சிரேஷ்ட விரிவுரையாளர் 2012 பெப்ரவரி 13 இலிருந்து உபவேந்தராக நியமிக்கப்பட்டிருந்தார்.<br><br>இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | இவை தொடர்பாக பின்வரும் தகவல்களை தங்களின் கவனத்திற்காகச் சமர்ப்பிக்கின்றோம்.<br>1. விண்ணப்பங்கள் கோரும் சந்தர்ப்பத்தில் தகுதிவாய்ந்த அதிகாரி அவர்களே அதிகாரத்தில் இருந்தார், அவர் கௌரவ உயர்கல்வி அமைச்சர் அவர்களால் தனக்கிருந்த அதிகாரத்தின் பிரகாரம் பல்கலைக்கழக சட்டம் 16, 1978 இற்கமைவாக நியமிக்கக்கப்பட்டிருந்தார்.<br>2. பேரவைக்காக கடமையாற்றும் தகுதிவாய்ந்த அதிகாரியவர்கள் கௌரவ உயர்கல்வி அமைச்சர் மற்றும் தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஆலோசனைக்கமைவாக உபவேந்தர் பதவிக்கான விளம்பரம் கோரப்பட்டது.<br>3. உபவேந்தர் பதவிக்கான விளம்பரத்தில் பதவிக்கு விண்ணப்பிக்க தகுதியானவரின் குடியுரிமை தொடர்பாக எதுவும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.<br>4. இவ் விளம்பரத்தின் பிரதிபலனாகப் பெறப்பட்ட விண்ணப்பங்கள் சுருக்கமாக பட்டியற்படுத்தப்பட்டது. |
| (அ) | உபவேந்தர் பதவிக்கான விண்ணப்பம் 2011 செப்தெம்பர் 30 வரை ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. கனடா பிரஜாவுரிமையுடைய ஒருவர் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் தரம் II எண்கணித சிரேஷ்ட விரிவுரையாளர் உன்பொர் உபவேந்தர் பதவிக்காக விண்ணப்பத்திருந்தனர். அதே நேரம் அவர் 2011 செப்தெம்பர் 30 வரை பதவி வறிதாக்கப்பட்டிருந்தார். | |

| | | |
|---|---|---|
| (ஆ) | உபவேந்தர் பதவிக்கான விண்ணப்பம் 2011 செப்தெம்பர் 30 இல் முன்னாள் தரம் II எண்கணித சிரேஷ்ட விரிவுரையாளரால் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், உபவேந்தர் பதவிக்காக விண்ணப்பம் சமர்ப்பித்த பின்னர் 2011 ஒக்தோபர் 11 இலேயே அவருடைய பதவி மீள்சேர்த்தலிற்காக பல்கலைக்கழகத்திற்கு கோரிக்கை செய்யப்பட்டிருந்தது. | 5. 2012ஆம் ஆண்டு தை மாதம் 1ஆம் திகதி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் புதிய பேரவை உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டு பேரவையானது மீண்டும் செயற்படுத்தப்பட்டது.<br>6. அதன்பின் பதிவாளர் அவர்கள் பேரவையின் சிறப்புக் கூட்டத்திற்கு 14.01.2012 இல் அழைப்பு விடுத்திருந்தார், அங்கு உபவேந்தர் பதவிக்காக விண்ணப்பித்தவர்களின் பெயர்கள் முன்னாள் பேராதனைப் பல்கலைக்கழக உபவேந்தரும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பிரதிநிதியும், உறுப்பினருமான பேராசிரியர் அபேயகுணவர்தன அவர்கள் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.<br>7. பேரவையின் சிறப்புக் கூட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டவை அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் மேலதிக நடவடிக்கைக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட்டது. அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் 13.02.2012 ஆம் திகதிக் கடிதத்தின் பிரகாரம் புதிய உபவேந்தர் நியமிக்கப்பட்டார்.<br>8. உபவேந்தர் பதவியை உருவாக்கும் சிறப்புரிமை அதிமேதகு ஜனாதிபதி அவர்களையே சாரும்.<br>9. அதனால் உபவேந்தர் அவர்கள் 2012ஆம் ஆண்டு பங்குனி மாதம் 5ஆம் திகதி கடமைகளைப் பொறுப்பேற்றார். |
| (இ) | சபையானது 2012 சனவரி 14 இல் தென் 220 ஆவது கூட்டத்தில் கனடா பிரஜையை சிபார்சு செய்த அதே நேரம் இலங்கை அரசாங்க தாபன விதிக் கோவையின் ஏ ஆம் அத்தியாயத்தின் 8.2 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளைக் கருத்திற்கொள்ளாமல் உபவேந்தர் பதவிக்காக தொரிவு செய்தவர் 2006 மே 01 முதல் நவம்பர் 30 வரை அவருடைய பதவி வறிதாக்கப்பட்டவர் கனடாவில் வசிக்கின்றார். | |
| (ஈ) | முன்னாள் தரம் II எண்கணித சிரேஷ்ட விரிவுரையாளர் 2012 பெப்ரவரி 13 இல் உபவேந்தராக நியமிக்கப்பட்டிருந்தார். எவ்வாறாயினும், உபவேந்தராக 2012 மார்ச் 05 இலேயே பல்கலைக்கழகத்தில் அவர் அவருடைய கடமைகளை பொறுப்பேற்றிருந்ததுடன் கனடாவில் இருந்து திரும்பிய பின்னர் எண்கணித திணைக்களத்தில் முன்னாள் தரம் II எண்கணித சிரேஷ்ட விரிவுரையர்ளராக அவர் கடமையிலிருந்து அதே திகதியில் மீள கடமையைப் பொறுப்பெற்றிருந்தார். | |
| (உ) | உவேந்தராக நியமிக்கும் நேரத்தில் அவர் கனடா முகவரியில் வசிக்கின்ற போதிலும் தபாலிடப்பட்ட நியமனக் கடிதத்தில் மட்டக்களப்பு முகவரி குறிப்பிடப்பட்டது. | |
| (ஊ) | 2011 ஒக்தோபர் 11 இல் அதற்காக அவர் வேண்டுகை செய்த பின்னர் 2011 திசெம்பர் 01 இல் பல்கலைக்கழகத்தால் முன்னர் சிரேஷ்ட விரிவுரையாளர் திரும்ப வழங்கப்பட்டிருந்த போதிலும் அவர் 2012 மார்ச் 05 இலேயே முன்னாள் தரம் II எண்கணித சிரேஷ்ட விரிவுரையாளராக கடமையை ஏற்றிருந்தார். | |
| **4.3 முகாமைத்துவ திறமையீனங்கள்** | | |
| (அ) | புலமைப்பரிசில் பெற்று வெளிநாடுகளிற்கு சென்ற பல்கலைக்கழகத்தின் ஐம்பத்தியொன்பது விரிவுரையாளர்கள் புலமைப்பரிசில்களைப் பூர்த்தி செய்த பின்னர் கடமைக்கு திரும்பியிருக்கவில்லை அல்லது பல்கலைக்கழகத்தை விட்டு விலகிச் சென்றிருந்தனர். எவ்வாறாயினும், பல்கலைக்கழகம் உடன்படிக்கையை மீறியமைக்காக அந்த 59 விரிவுரையாளர்களிடமிருந்து ரூபா 150,994,569 | • 12 வழக்குகள் உட்பட 72 எண்ணிக்கையான கடப்பாடு ஒப்பந்தத்தை மீறியோரது வழக்குகள் சட்டமா அதிபர் அலுவலகத்திடம் சட்ட நடவடிக்கைகளுக்காகவும், அவர்களிடமிருந்து பெறவேண்டிய பணத்தை அறவிடுவதற்காகவும் கையளிக்கப்பட்டுள்ளன. இரண்டு அரச வழக்கறிஞர்கள் இவற்றைக் கையாள்கின்றனர். ஏறக்குறைய ரூபா 9.7 மில்லியன் தற்போது வரை கடப்பாட்டு ஒப்பந்தத்தை மீறியோரிடமிருந்து மீளப் பெறப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| | தொகையை அறவிடுவதற்கு வடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இது தொடர்பில் உபவேந்தர் 74 பிணைமுறி மீறியோரிடமிருந்து அறவிடவேண்டியதை அஅறவிடுவதற்கும் சட்டமா அதிபர் நாயக திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததென எனக்குத் தெரிவித்தார். அந்த வழக்குகளை இரண்டு அரச சபைகள் கையாளுகின்றன. மேலும், 2014 ஏப்ரல் 30 வரை பிணைமுறி மீறியோரிடமிருந்து ரூபா 9.7 மில்லியன் கூட்டுமொத்த தொகை அறவிடப்பட்டிருந்தது. | • சட்டமா அதிபர் பத்து வருடங்களுக்கு மேற்பட்ட வழக்குகள் தொடர்பில் எதிர்காலத்தில் எவ்வித நடவடிக்கையும் எடுக்க முடியாதென தெரிவித்திருந்தார். இருப்பினும் 10 வருடங்களுக்கு மேற்பட்ட வழக்குகளை தொடர்ந்து முன்னெடுப்பதற்கான அனுமதியை தலைவர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு/ மற்றும் செயலாளர்/ உயர்கல்வி அமைச்சு என்பவற்றிற்கூடாக சட்டமா அதிபர் அவர்களிடம் கோரியிருக்கின்றோம்.<br>• சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து இதுவரை எவ்விதாமான சாதகமான பதிலும் கிடைக்கப்பெறவில்லை. 31.12.2013 அன்று உள்ளபடியான கடப்பாடு ஒப்பந்தத்தை மீறியோரது தொகை பின்வருமாறு.<br>கட்டுப்பணத்தின் மொத்த தொகை ரூபா 160,786,567.43<br>மொத்தமாகப் பெறப்பட்டது ரூபா 9,791,997.71 |
| (ஆ) | 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 29(டி) மற்றும் 29(ஈ) பிரிவுகளின் பிரகாரம் பல்கலைக்கழகத்தால் பட்டபின் படிப்பு பாடநெறிகளுக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (யூஜீசீ) அங்கிகாரம் 2013 திசெம்பர் 31 வரை கூட பெறப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அத்தகைய அங்கீகாரம் இல்லாமல் மூன்று பட்டப்பின்படிப்பு பாடநெறிகள் (கற்பிக்கப்பட்ட பாடநெறிகள்) நடாத்தப்பட்டிருந்தது. அது தொடர்பில் உபவேந்தர் எம்.பில், பீ.எச்.டி போன்ற அத்தகைய ஆராய்ச்சி அடிப்படை பாடநெறிகளுக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் அவசியமற்றதென்று எனக்கு தெரிவித்திருந்தார். | கணக்காய்வாளர் தலைமையதிபதி அவர்களின் கூற்று ஏற்றுக்கொள்ளப்பட்டது.<br>பல்கலைக்கழகங்களில் நிலையியற்குழு நிறுவப்படும்வரை அதற்கான அனுமதியை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவே வழங்கியது. இதனாலேயே சகல பல்கலைக்கழகங்களிலும், எல்லா பட்ட பின்படிப்பு கற்கைகளும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நிலையியல் குழு அங்கீகாரம் இல்லாமல் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால் தற்போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது இவ்வாறான பட்டப் பின்படிப்புக் கற்கைகளை சீர்ப்படுத்துமாறு பல்கலைக்கழகங்களைக் கோரியுள்ளது.<br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதியானது ஆய்வுப் பட்டங்களான முதுமானி மற்றும் கலாநிதிப் பட்டங்களுக்கு அவசியமல்ல. |
| (இ) | இலங்கை அரசாங்க தாபனவிதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 5 ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 20 உத்தியோகபூர்வ விடுதிகளில் வசித்த 38 உத்தியோகத்தர்களிடமிருந்து வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை.<br>இருந்தபோதிலும், 2002 ஏப்ரல் 16 அந் திகதிய 147/2002 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்க மதிப்பீட்டாளர்களிடமிருந்து அறிக்கை பெற்றுக் கொள்ளாமல் மீளாய்வாண்டின்போது ரூபா 150 முதல் ரூபா 600 வரையான வீச்சில் மாதாந்த வாடகையில் பல்கலைக்கழகத்திற்கு சொந்தமான உத்தியோகபூர்வ விடுதிகளில் வசிக்கின்றவர்களிடமிருந்து பொருளாதார வாடகை அறவிடப்பட்டிருந்தது. | கணக்காய்வாளர் தலைமையதிபதி அவர்களின் கூற்று ஏற்றுக்கொள்ளப்பட்டது.<br>16.04.2002ஆம் திகதியிடப்பட்ட அரச கணக்கு சுற்று நிருபம் இல. 147/2002 இற்கமைவாக எதிர்வரும் காலங்களில் ஒத்துப்போக நடவடிக்கை எடுக்கப்படும். |

<table>
<tr><td colspan="3">4.4 மருத்துவ உபகரணங்களின் கொள்வனவு</td></tr>
<tr><td></td><td>சுகாதார பராமரிப்பு விஞ்ஞான பீடத்தின் (எவ்.எச்.சி.எஸ்) பயன்பாட்டிற்காக இந்தியாவிலுள்ள ஒரு தனியார் கம்பனியிடமிருந்து முன்னைய ஆண்டின் போது ருபா 13.36 மில்லியன் பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.</td><td rowspan="6">இவ்விடயம் தொடர்பாக தற்போது பல்கலைக்கழகமானது முழுமையாக ஆராய்கிறது.<br><br>பல்கலைக்கழகமானது கொழும்பு சுகாதார சேவைகள் அமைச்சின் உயிரியல் மருத்துவ எந்திரவியல் சேவைகள் பிரிவின் உயிரியல் மருத்துவ எந்திரவியலாளரிடம் மருத்துவ உபகரணத்தின் தரம் மற்றும் பெறுமதி தொடர்பான அறிக்கை கோரப்பட்டிருக்கிறது.<br><br>உயிரியல் மருத்துவ எந்திரவியலாளரின் அறிக்கைக்கமைவாக பல்கலைக்கழகமானது அதனை ஆராய்வதற்காக ஓய்வுபெற்ற கணக்காய்வு அத்தியட்சகர் ஒருவரை சுயாதீன விசாரணை அதிகாரியாக நியமித்திருந்தது.<br><br>இவ்விசாரணை அதிகாரி 20.01.2014 அன்று தனது அறிக்கையை சமர்ப்பித்திருந்தார். 27.01.2014 அன்று நடைபெற்ற 29ஆவது கணக்காய்வுக் குழுக் கூட்டத்தில் இது முன்வைக்கப்பட்டது. கணக்காய்வுக் குழுவினால் பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டன:<br><br>(அ). விநினியோகஸ்தரின் மோசடியான செயற்பாடுகளினால் ஏற்பட்ட இழப்புக்களை ஈடுசெய்வதற்காக பல்கலைக்கழகமானது மேலும் எவ்விதமான கொடுப்பனவுகளும் விநியோகஸ்தருக்குச் செய்யக்கூடாது.<br><br>(ஆ). விநியோகஸ்தர் பல்கலைக்கழகத்திற்கு விநியோகித்த பொருள் பற்றிய போலியான விலை மனு, அளவுக்கதிகமான பெறுமதி, வணிகச் சின்னத்தை முறைகேடான வழியில் மாற்றியமை ஆகியவற்றுடன் அவருக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதைத் தவிர்ப்பதற்காக விநியோகத்தை தாமதித்தமை என்பவற்றுடன், பல்கலைக்கழகத்தை ஏமாற்றியமைக்காக கிழக்குப் பல்கலைக்கழகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, உயர்கல்வி அமைச்சு மற்றும் நிதித் திணைக்களம் என்பவற்றால் கறுப்புப் பட்டியலிடப்பட வேண்டும்.<br><br>(இ). நான்கு விசாரணைகள் ஏற்கெனவே நடைபெற்றிருப்பதாலும் விசாரணைகளில் பெறப்பட்ட முடிவுகள் ஒரே மாதிரியாக இருப்பதனாலும், இது தொடர்பாக மேலும் விசாரணைகள் தேவையில்லையென கணக்காய்வுக்குழு சிபார்சு செய்தது. இதன் மூலம் இறுதி முடிவெடுக்கும் தாமதத்தை மேலும் தவிர்ப்பதற்கு ஏதுவாக இருக்கும்.<br><br>(ஈ). மேலதி கொடுப்பனவை நிறுத்தி நட்டத்தை ஈடுசெய்தல்.<br><br>மேற்குறிப்பிடப்பட்டவை கணக்காய்வுக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்டு 24.01.2014இல் நடைபெற்ற பேரவையின் 248ஆவது கூட்டத்தில் முன்வைக்கப்பட்டு பேரவையானது கணக்காய்வாளர் நாயகம் அவர்களால் சுட்டிக்காட்டப்பட்ட குறைகள் தொடர்பான</td></tr>
<tr><td>அ.</td><td>தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவொன்று (ரீ.ஈ.சீ) மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு நியமிக்கப்பட்டிருக்கவில்லை. பதிலாக கொள்வனவுக் குழு (பி.சீ) சிபார்சு செய்யப்பட்டு மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>ஆ.</td><td>சுகாதார பராமரிப்பு விஞ்ஞன பீடம் வேண்டப்பட்ட கேள்வி நடைமுறைகளைப் பின்பற்றாமல் தெரிவு செய்யப்பட்ட வழங்குனர்களிற்கு ஈ மெயில் அனுப்பி நேரடியாக கேள்விகளை வரவழைத்திருந்தது.</td></tr>
<tr><td>இ.</td><td>கணக்காய்விற்கு கிடைக்க பெற்ற தகவல்களின் பிரகாரம், எல்லா மூன்று கேள்விகளையும் ஒரே வழங்குனர் சமர்ப்பித்திருந்ததுடன் வழங்குநரால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளில் முறைகேடுகள் இருந்தன. எவ்வாறாயினும் இது கொள்வனவுக் குழுவால் கருத்திற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.</td></tr>
<tr><td>ஈ.</td><td>“ரிசு செய்படுத்துதலின் எட்டு உதிரிப்பாகங்கள்” என்றழைக்கப்படும் மருத்துவ உபகரணங்கள் ரூபா 4.5 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. ரூபா 2.9 மில்லியன் பெறுமதியான ரிசு செயற்படுத்துதல் பிரதான பாகம் கொள்வனவு செய்ய தவறியமை காரணமாக கொள்வனவு செய்த திகதியிலிருந்து பெட்டியில் பயனற்று இருந்தது.</td></tr>
<tr><td>உ.</td><td>கணக்காய்வு குழு பொய்யான கேள்விகள் சமர்ப்பித்தல், மிகவும் அதிகமான விலைகள், பல்கலைக்கிகத்திற்கு வழங்கப்பட்ட விடயங்களில் தற்காலிக வியாபாரக்குறி மற்றும் அடையாளத்துடன் வழங்கல் மற்றும் வழங்கலிலுள்ள தாமதம் என்பன மூலம் பல்கலைக்கழகத்தை ஏமாற்றிய வழங்குநர்களிடமிருந்து இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தில் வழங்குனரை கறுப்புப் பட்டியலிற்கு 2014 சனவரி 27</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | | கேள்விகள் தொடர்பில் கொள்வனவுக்குழுவுக்கு எவ்விதமான உள்நோக்கங்களும் இருக்கவில்லை எனவும், நிதி நட்டங்கள் எதுவும் கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு ஏற்படவில்லை எனவும் உணர்ந்தது. பேரவையின் இந்த முடிவை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. |
| **4.6 Human Resources Management** | | |
| (அ) | பல்கலைக்கழகமானது 88 வெற்றிடங்களை நிரப்புவதற்கு மீளாய்வாண்டு இறுதிவரைகூட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முக்கியமான கல்விசார் பதவிகளுக்கு பத்திரிகை மூலம் 2006 மற்றும் 2012ஆம் ஆண்டுகளில் விளம்பரங்கள் கோரப்பட்டிருந்தன, எனினும் பேராசிரியர் பதவிக்கு சாதகமான முடிவுகள் எவையும் கிடைக்கவில்லை. ஆகையால் இந்த பதவிகள், சில சிரேஷ்ட விரவுரையாளர்கள் (ஒப்பந்த அடிப்படை ) அல்லது தற்காலிக உதவி விரிவுரையாளர்கள் பதவிகளுக்கு பீடங்களின் தேவைக்கேற்றவாறு மாற்றப்பட்டு/நிரப்பப்பட்டன. எவ்வாறாயினும் வெகு விரைவில் இவ் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | பல்கலைக்கழகத்தின் ஐந்து பீடங்களில் பேராசிரியர் மற்றும் இணைந்த பேராசிரியர் போன்ற அத்தகைய பிரதன கல்விசார் பதவியில் 20 வெற்றிடங்கள் உள்ளன. எவ்வாறாயினும், பல்கலைக்கழகமானது வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | |
| **5. கணக்களித்தல் மற்றும் நல்லாளுகை** | | |
| **5.1** | **ஆண்டறிக்கை முன்வைத்தல்**<br><br>2011 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை 2014 சனவரி 20 இலேயே பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு இருந்ததுடன் 2012 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை 2014 ஏப்ரல் 30 வரை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | வழமையாக ஆண்டறிக்கைகள் உயர்கல்வி அமைச்சினூடாகவே பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும். அமைச்சினால் ஆண்டறிக்கைகள் தொடர்பில் மதிப்பாய்வு செய்யப்பட்டதன் பின்னரே அவை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும். இதன் அடிப்படையில் எமது அறிக்கைகளை சம்பந்தப்பட்ட அமைச்சுக்கு ஏற்கெனவே நாம் அனுப்பியுள்ளோம். |
| **5.2** | **செயற்பாட்டுத் திட்டம்**<br><br>அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் 2010 மார்ச் 10 ஆந் திகதிய பிஎவ்/ஆர்/2/2/3/5/(4) ஆம் இலக்க சுற்றறிக்கை கடிதத்தின் பிரகாரம் பல்கலைக்கழகமானது மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டுத் திட்டம் மற்றும் வருடாந்த செயலாற்றல் என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வாளர் தலைமையதிபதி அவர்களின் கூற்று ஏற்றுக்கொள்ளப்பட்டது.<br>தற்போது நிறுவனத்தின் திட்டம், மூலோபாயத் திட்டம், செயற்றிட்டம் மற்றும் வருடாந்த செயலாற்றுகைத் திட்டம் என்பன பொது நிதிய பணிப்பாளர் நாயகம் அவர்களின் 10.03.2010ஆம் திகதிய சுற்றறிக்கை இல. பிஎவ்/ஆர்/2/2/3/5(4) இற்கமைவாக புதுப்பிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. |
| **5.3** | **உள்ளகக் கணக்காய்வு**<br><br>நிரந்தர மற்றும் அனுபவமுள்ள பதவியணியினர் வினைத்திறனான மற்றும் ஆக்கபூர்வமான வழியில் உள்ளக கணக்காய்வை மேற்கொள்வதற்கு நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கணக்காய்வுப்பிரிவானது ஒரு அனுபவம் வாய்ந்த உதவி உள்ளகக் கணக்கயாய்வாளரின் கீழ் ஆரம்பத்திலிருந்த பதவி நிலைப்பிரிவுடனே இயங்கி வருகிறது. இருந்தும் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் விரிவாக்கத்தினால் வேலையின் அளவு அதிகரித்ததன் பொருட்டு மேலதிக பதவிநிலை கோரி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கு முன்மொழியப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| **5.4** | **கொள்வனவுத் திட்டம்**<br><br>2006 கொள்வனவு வழிகாட்டல்களின் 4.2 ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வாளர் தலைமையதிபதி அவர்களின் கூற்று ஏற்றுக்கொள்ளப்பட்டது.<br><br>தற்போது அது கொள்வனவு வழிகாட்டி - 2006, பிரிவு 4.2 க்கமைவாக தயார் செய்யப்படுகிறது. |
| 5.5 | **பாதீட்டுக் கட்டுப்பாடு**<br><br>பாதிடப்பட்ட செலவினம் மற்றும் உண்மையான செலவினத்திற்கு இடையில் பாரிய முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் ஒரு தாக்கமான கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைக் காட்டுகின்றது. | கணக்காய்வாளர் தலைமையதிபதி அவர்களின் கூற்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதன் முக்கிய மாறுபாட்டிற்கான காரணம் கல்விசார் ஊழியர்களின் கொடுப்பனவு அதிகரிப்பு, தேய்மானத் தொகையின் அதிகரிப்பு, மேலதிக மாணவர்களின் உள்வாங்கல் மற்றும், சம்பந்தப்பட்ட ஆண்டில் நடைபெற்ற ஒழுக்காற்று விசாரணைகளின் பயனாக சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட/ நிறுத்தப்பட்ட 31 ஊழியர்களின் பணிக்கொடைக் கொடுப்பனவு என்பவையாகும். |
| **6** | **முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**<br><br>கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்கு காலம் பல்கலைக்கழக உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.<br><br>(அ) கணக்கீடு<br>(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்<br>(இ) முற்பணங்களின் கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள்<br>(ஈ) கொள்வனவு நடைமுறைகள்<br>(உ) ஓய்வு பெறல் நடைமுறைகள் | செயற்பாட்டிற்காக குறித்துக்கொள்கிறோம். |

**ஒப்பம்**
**கலாநிதி கே. கோபிந்தராஜா**
**உபவேந்தர்**